**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 15/2024 DW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சுதா | க-பெ/ த–பெ | இராமநாதன் |
| ஊர்: | : | இலுப்பக்குடி | சமயம் | |
| வயது: | : | 39/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.07.2026**

-------------------------------------------------------------------------------------------------------

**23.07.2026**

**முதல் விசாரணை**

1) எனது அக்கா சுமதி மூலமாக புகார்தாரர் முத்து லெட்சுமி பழக்கம். நான் புகார்தாரரிடம் ரூ. 5,00,000/– 2018 ல் கடனாக கேட்டிருந்தேன். புகார்தாரர் பூமிநாதன் என்பவரிடம் இருந்து பணம் பெற்று தருவதாக கூறி பூமிநாதனிடம் என்னை அறிமுகம் செய்து வைத்தார். பூமிநாதன் கடனுக்காக எனது அசல் வீட்டுப்பத்திரம் மற்றும் 4 காசோலைகள் என்னிடம் இருந்து பெற்றார். ரூ.5,00,000/– பூமிநாதனிடம் இருந்து கடனாகப்பெற்றேன். அதற்கு முத்து லெட்சுமி என்னிடம் ரூ.25,000/– கமிசன் கேட்டார். அதற்கு ரூ.10,000/– கொடுத்தேன். 2019 ல் பூலூட்டன் இந்தியாவிடம் இருந்து ரூ. 3,00,000/– கடனாக பெற்றேன், அப்போது பூமிநாதன் எனது ஒரு காசோலையை ரூ.3,00,000/– பயன்படுத்தி அந்த கடன் தொகையை எடுத்துக்கொண்டார். மீதி உள்ள ரூ. 2,00,000/– பூமிநாதனிடம் ரொக்கமாக திருப்பி செலுத்திவிட்டு எனது வீட்டு அசல் பத்திரத்தை பெற்றுக்கொண்டேன். எனது மீதி உள்ள எனது காசோலைகளை திருப்பி கேட்டேன் அதற்கு பூமிநாதன் காசோலைகளை முத்து லெட்சுமியிடம் கொடுத்து என்னிடம் தருவதாக கூறினார். நான் முத்து லெட்சுமியிடம் கேட்டபோது கமிசன் தொகையை தரவில்லை எப்படி திருப்பி தருவேன் என்று கேட்டார். முத்து லெட்சுமியிடம் நான் எந்த

தொகையும் கடனாக பெறவில்லை. காசோலையும் கொடுக்கவில்லை. பொய்யாக என் மீது  வழக்கு தாக்கல் செய்துள்ளார். காசோலை தொகை கொடுக்க நான் சட்டப்படி கொடுக்க கடமைபட்டவர் இல்லை.

**<u>குறுக்கு விசாரணை</u>**

( புகார்தாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் காலம் கேட்டுக்கொண்டதால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது )

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.07.23 18:25:01 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
காரைக்குடி.